8.VII. மீள்குடியமர்த்தல் திட்டத்தின் கீழ் காணப்படும் மாற்று வழிமுறைகள்

8.VII.அ பயனாளி தமக்கு உரித்தான பிறிதொரு காணியில் வீட்டை நிர்மாணித்தல்

பயனாளிக்கு அல்லது அவரின் வாழ்க்கைத் துணைக்கு உரித்தான உரித்து நிர்ணயிக்கப்பட்டதான, உரித்தினை கொண்டிருக்கக்கூடிய, குடியிருப்பதற்கு உகந்த பிறிதொரு காணி காணப்படும் பட்சத்தில், மாற்று வழிமுறைகளின் கீழ், நன்மை வழங்க முடியாது. பயனாளிக்கு சொந்தமான காணியில் வீட்டை நிர்மாணிப்பதற்கு மாத்திரம் நிதி ஏற்பாடுகளை வழங்க வேண்டும் என்பதுடன், வீட்டை நிர்மாணிப்பதற்காக வழங்கப்படும் ரூ.5.0 மில்லியன் நிதியை, நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளும் முன்னேற்றத்துக்கு ஏற்ப 10.IV இற்கு அமைய 03 தவணையில் பயனாளிக்கு வழங்குதல் வேண்டும்.

8.VII.ஆ பயனாளிக்கு சொந்தமான வீட்டை புனரமைத்தல்.

பயனாளி அல்லது அவரின் வாழ்க்கைத் துணைக்கு சொந்தமான உரித்து நிர்ணயிக்கப்பட்ட, குடியிருக்க உகந்த காணியொன்றில் காணப்படும் வீடானது 10.1 பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்த தரத்தில் காணப்படாத சந்தர்ப்பத்தில் இங்கு இணைக்கப்பட்டுள்ள வீட்டு திட்டமொன்றைத் தெரிவு செய்து குறிப்பிட்ட ஆகக் குறைந்த தரத்தை கட்டியெழுப்புவதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மதிப்பீட்டு குழுவின் விதப்புரையின் மீது. ரூ.5.0 மில்லியன் வரை பயனாளியுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டு வழங்குதல் வேண்டும்.

8.VII.இ அரசாங்கம் வழங்கும் காணியொன்றில் வீடொன்றை நிர்மாணித்தல்

மீள்குடியமர்வதற்கு தமக்கு உரித்தான பிறிதொரு காணியொன்று காணப்படாத பயனாளியொருவரை அரசாங்கத்தினால் வழங்கப்படும் காணியொன்றில் வீடொன்றை நிர்மாணிக்கும் மாற்று வழிமுறைக்கு ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், ஆகக் குறைந்தது 10 பேர்ச்சசுக்கு உட்பட்டதாக காணித் துண்டொன்றை வழங்குதல் வேண்டும்.

வீடொன்றை நிர்மாணிப்பதற்காக வழங்கும் ரூ.5.0 மில்லினை நிர்மாணிப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு 10.IV இற்கு அமைய 03 தவணையில் பயனாளிக்கு வழங்குதல் வேண்டும். பயனாளிக்கு அரசாங்கம் வழங்கும் காணியில் வீடொன்றை நிர்மாணித்தல் கட்டாயமானது என்பதுடன், இவ்வாறு செயற்பாத சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட காணியை மீண்டும் அரசாங்கத்துக்கு பொறுப்பேற்பதற்கு அல்லது மீள்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் பிறிதொரு பயனாளிக்கு வழற்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

8.VII.ஈ அரசாங்க வீடமைப்புத் திட்டத்தில் வீடொன்றை பெற்றுக்கொள்ளுதல் அல்லது பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புத் தொகுதியிலிருந்து வீடொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்.

இந்த மாற்று வழிமுறைக்கு ஏற்ப வீடொன்றை வழங்குகையில் வழங்கப்படும் வீட்டின் சதுரப்பரப்பளவு, பெறுமதி மற்றும் தரம் என்பவை மீள்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வீடுகளுக்கு பொருத்தமான வித்தில் காணப்படுதல் வேண்டும்.

8.VII. உ.வீடொன்றைக் கொள்வனவு செய்தல்.

மேலே 8.VII.ஆ., 8.VII.ஆ., அல்லது 8.VII.இ இற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயனாளியொருவருக்கு வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கு மதிப்பீட்டை மேற்கொள்ளாது ஆகக் கூடியது ரூ.5.0 மில்லியன் வழங்கப்படும். கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வீடானது, இணைப்புகள் 03,04 மற்றும் 05 வீட்டுத் திட்டங்களில் காண்ப்படும் அம்சங்களை உள்ளடக்கியதாக ஆகக் குறைந்தது 650 சதுரப்பரப்பளவான வீடொன்றாகக் காணப்படுதல் வேண்டும்.

வீட்டைக் கொள்வனவு செய்வதற்கு செலவாகும் பணத்தொகை ரூ.5.0 மில்லியனை விடக் குறையும் சந்தர்ப்பத்தில் பயனாளி எஞ்சிய பணத்தைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட வீட்டை அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கும் மற்றும் ஆரோக்கியம் மற்றும் துப்பரவேற்பாடுடைய பாதுகாப்பானதொரு வீடாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வீடொன்றைக் கொள்வனவு செய்கையில், விற்பனையாளர், கொள்வனவாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகிய 03 தரப்பினர்களுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் பிரகாரம், பயனாளியின் பெயரில் எழுதப்படும் குறிப்பிட்ட பத்திரத்தின் பிரதி மற்றும் குறிப்பிட்ட ஆவணப்பத்திர நில அளவை வரைபடத்தின் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரதி ஆவணக்கோப்பில் இடப்படுதல் வேண்டும் என்பதுடன், விற்பனையாளருக்கு நேரடியாக கொடுப்பனவை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடொன்றைக் கொள்வனவு செய்கையில் விற்பனையாளருக்கு குறிப்பிட்ட பணத்தை செலுத்தியதன் பின்னர் ரூ.5.0 மில்லியன் வரை பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்த வீட்டின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு பயனாளியுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டு ஒரே தடவையில் வழங்குதல் வேண்டும்.

8.VII. உ. பயனாளி காணியொன்றைக் கொள்வனவு செய்து வீடொன்றை நிர்மாணித்தல்

இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேலே 8.VII.அ,ஆ,இ,ஈ ஆகிய மாற்று வழிமுறைகளை நோக்கி பயனாளிகளை ஆற்றுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இந்த மாற்று வழிமுறைகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பதங்களில் மாத்திரம் **8.VII.உ**. ஆகிய மாற்று வழிமுறைகளுக்கு பயனாளியை வழிப்படுத்துதல் வேண்டும்.

கொள்வனவு செய்யும் காணியின் அளவு ஆகக் குறைந்தது 10 பேர்ச்சசுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன், காணியின் அரசாங்க மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆகக் கூடியது ரூ.5.0 மில்லியனை வழங்க முடியும். காணியை கொள்வனவு செய்கையிலும் விற்பனையாளர், கொள்வனவாளர் மற்றும் பிரதேச செயலாளர் எனும் 03 தரப்பினர்களுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தமொன்றுக்கு அமைய பயனாளியின் பெயருக்கு எழுதப்படும் பத்திரத்தின் பிரதி மற்றும் குறிப்பிட்ட ஆவணப்பத்திர நிலஅளவை வரைபடத்தின் தத்துவமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்படும் பிரதியை ஆவணக்கோப்பில். இட்டதன் பின்னர், விற்பனையாளருக்கு நேரடியாக கொடுப்பனவை மேற்கொள்ளுதல் வேண்டும்.

கொள்வனவு செய்யப்படும் காணியில் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக வழங்கப்படும் ரூ.5.0 மில்லியனை, நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் முன்னேற்றத்தின் மீது 10.IV. இற்கு அமைய 03 தவணையில் பயனாளிக்கு வழங்குதல் வேண்டும்.

8.VIII. மீள்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய விடயங்கள்

8.VIII. அ. மீள்குடியேறுவதற்கு உத்தேசிக்கும் காணியின் உரித்து சட்டரீதியாக / உரித்து நிர்ணயம் செய்யப்பட்ட பத்திரம்

8.VIII.ஆ. காணியின் உரித்து நிர்ணயிக்கப்படாத சந்தர்ப்பத்தில் காணி உரிமையாளரின் விருப்பத்தை தெரிவிக்கும் சத்தியப் பிரமாணக் கடிதத்தை பெற்றுக்கொண்டு வீட்டை நிர்மாணிப்பதற்கான பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

8.VIII.இ. பயனாளிக்கு உரித்தான /அரசாங்கத்தினால் வழங்கப்படும் / கொள்வனவு செய்யப்படும் காணியானது மண்சரி அபாயம் உள்ள மாவட்டமொன்றில் அமைந்துள்ள பட்சத்தில், குறிப்பிட்ட காணியில் மண்சரிவு அபாயம் இல்லை என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் அறிக்கை

8.VIII.ஈ. இவ்வாறு காணப்படாத சந்தர்ப்பத்தில் பயனாளிக்கு சொந்தமான / அரசாங்கத்தினால் வழங்கப்படும் / கொள்வனவு செய்யப்படும் காணியில் அனர்த்த அபாயம் காணப்படுவதில்லையென குறிப்பிட்ட தொழிநுட்ப நிறுவனம் வழங்கும் அறிக்கை

8.VIII.உ வீடொன்றைக் கொள்வனவு செய்கையில் குறிப்பிட்ட வீடு குடியிப்பதற்கு உகந்ததென விதப்புரை செய்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கும் அறிக்கை

8.VIII.ஊ. 8.VII.உ.ஆகிய மாற்று வழிமுறைகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் **கொள்வனவு செய்யப்படும்** காணிக்கு பெற்றுக்கொள்ளப்படும் அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கை

8.IX. பயனாளியுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளுதல்

மீள்குடியமர்த்தும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பயனாளியொருவர் தமது விருப்பத்தின் மீது மீள்குடியமர்வதற்கு மேற்குறிப்பிட்ட மாற்று வழிமுறைகளில் ஒரு வழிமுறையை தெரிவு செய்ததன் பின்னர் இணைப்பு 01 அல்லது .இணைப்பு 02இல் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய மீள்குடியேறும் காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் மற்றும் குறிப்பிட்ட பயனாளிக்கு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள முடியும். இந்த ஒப்பந்தம் மீறப்படும் சந்தரப்பங்களில் இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

9. மீள்குடியமர்வதற்கான காணியைத் தெரிவு செய்தல்

9.1 பிரதேச செயலாளர் மீள்குடியமர்வதற்கான காணியை தெரிவு செய்கையில், நீர், மின்சாரம் மற்றும் பிரவேசப் பாதை போன்ற பொதுத் தேவைகளை விரைவில் பெற்றக்கொள்ளக் கூடிய மற்றும் மக்களின் குடியிருப்புக்கு உகந்த காணிகளை தெரிவு செய்வதற்கு இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

9.II.பயனாளியின் உரிமை நிர்ணயிக்கப்படாத மற்றும் உரித்தினை உறுதிப்படுத்த முடியாத காணிகளை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகையில் காணி உரிமையாளரின் விருப்பத்தை தெரிவிக்கும் சத்தியப் பிரமாணக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

9.III மீள்குடியமர்த்துவதற்காக காணிகளைத் தெரிவு செய்கையில், அனர்த்தங்களுக்கு ஆளாகாத, குடியேறுவதற்ககு உகந்த காணிகளை தேசிய கட்டடி ஆராய்ச்சி நிறுவனம் / நீர்ப்பாசன திணைக்களம் /உரிய தொழிநுட்ப நிறுவனத்தின் விதப்புரைகள் சகிதம் தெரிவு செய்தல் வேண்டும்.

9.IV.அரசாங்கம் கைக்கொள்ளும் பழைய விவசாயக் காணிகளை பயறுதிமிக்க குத்தனை ஒப்பந்தங்களின் கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட பயனாளிக்கு மீண்டும் வழங்குவதற்கான வாய்ப்புக் காணப்படுவதனால், அரசாங்க காணிகளுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்கையில் அவர்கள் உள்ளடங்கும் முன்னுரிமைப் பட்டியல் மற்றும் முன்னர் குடியிருந்த காணிக்கு எவ்வளவு அருகாமையில் அவர்கள் குடியேறியுள்ளார்கள் என்பது குறித்து கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9.V. காணி அபிவிருத்தி

காணிகளை துண்டாக்குதல், அபிவிருத்திப் பணிகளுக்காக நிலத்தை தயார் செய்தல், நிலத்தை நிலையானதாக மாற்றுதல், மேற்பரப்பில் வழிந்தோடும் நீருக்கான கால்வாய்களை தயார் செய்தல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற விடயங்கள் காணியை அபிவிருத்தி செய்வதில் உள்ளடங்குகின்றன. இக்காணி அபிவிருத்திப் பணிகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தொழிநுட்ப வழிகாட்டியில் குறிப்பிடப்படும் ஆலோசனைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

10. வீட்டுத் திட்டத்தை அங்கீகரித்தலும் வீட்டை நிர்மாணித்தலும்

10.1 வீட்டுத் திட்டத்தை அங்கீகரித்தல்

வீட்டை நிர்மாணிக்கையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் தயார் செய்யப்பட்டுள்ள இங்கு இணைப்பு 04,05 மற்றும் 06இல் முன்வைக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களை பயன்படுத்துதல் வேண்டும்.

இத்திட்டத்துக்கு மேலதிகமாக பயனாளியின் விருப்பத்தின் மீது தயார் செய்யப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களை பயன்படுத்தும் பட்சத்தில், இத்திட்டத்தை மாதிரி 02ஐப் பயன்படுத்தி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு முன்வைத்து அதன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே, வீட்டை நிர்மாணிப்பதற்கு முன்னர் வீட்டுத் திட்டத்துக்கு உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

10.II நன்கொடை வழங்கும் நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்கான திட்டங்கள்

வீடுகளை நிர்மாணிப்பதற்கு நன்கொடை வழங்கும் நிறுவனங்கள் அவர்களால் தயாரிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை பயன்படுத்தும் பட்சத்தில், அவை மீள்குடியமர்த்தும் திட்டத்தின் ஆகக் குறைந்தபட்ச தரத்தையேனும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

10.III. வீட்டை நிர்மாணிக்கையில் காணப்பட வேண்டிய அடிப்படை விதிகள்

I. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள அல்லது பயனாளியினால் தயார் செய்யப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்துக்கு உரிய உள்ளூராட்சி நிறுவனத்திடம் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

II.ஆகக் குறைந்தது கட்டப்படும் வீடானது 650 சதுரப் பரப்பளவைக் கொண்டதாகக் காணப்படுதல் வேண்டும்.

III.அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கும் அத்திவாரத்தையும் உரிய கட்டமைப்பையும் கொண்டாகக் காணப்படுதல் (தே.க.ஆ.நிறுவனத்தின் விதப்புரைகளுக்கு அமைய நிர்மாணித்தல்)

IV.ஆகக் குறைந்தது 02 படுக்கை அறைகள் காணப்படுதல்

V. வரவேற்புக் கூடம்

VI. சமையலறை

VII.நிரந்தர கூரை

VIII. நீர் வசதி கொண்ட மலசலகூடம்

10.IV. வீட்டை நிர்மாணித்தலும் தவணைப் பணத்தை விடுவித்தலும்

10.IV.அ மீள்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ், பயனாளிகளை மீள்குடியமர்த்துகையில் சேதத்துக்கு உட்பட்டுள்ள அல்லது உயர் அபாயம் காணப்பட்ட வீட்டுக்குப் பதிலாக புதியதொரு வீட்டைக் கட்டுவதற்கான நிதி உதவி, தொழிநுட்ப மற்றும் ஆலோசனை உதவிகளை பிரதேச செயலாளர் உரிய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புடன் வழங்குதல் வேண்டும்.

10.IV.ஆ. வீட்டை நிர்மாணிப்பதற்கான முதலாவது தவணைப் பணத்தை வழங்கிய திகதி முதல் 07 மாத காலப்பகுதியில் குறிப்பிட்ட பணிகளை பூர்த்தி செய்து வீட்டில் குடியேறுதல் வேண்டும்.

10.IV.இ. பயனாளி நியாயமான காரணமின்றி குறிப்பிட்ட காலப்பகுதியில் வீட்டை நிர்மாணிக்காத பட்சத்தில், எதிர்காலத்தில் ஏற்படும் எந்தவொரு அனர்த்தத்தின்போதும் நன்மைகளை வழங்குவதில்லை எனவும், அத்தகையவர்களை மீள்குடியமர்த்தும் திட்டத்திலிருந்து அகற்றுவதாகவும் அவருக்கு மீள்குடியமர்த்தும் திட்டத்தில் கீழ் வழங்கப்பட்டுள்ள பணத்தை ஒப்பந்தத்தின் பிரகாரம் திருப்பிச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டு குறித்த பயனாளிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இதன்போது குறிப்பிட்ட பணத்தொகையை குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அறவிட்ட பின்னர், பயனாளியை மீள்குடியமர்த்தும் திட்டத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

10.IV. ஈ. இதற்கமைய வீடொன்றை முழுமையாக கட்டி முடிப்பதற்கு எடுக்க வேண்டிய காலம் ஆகக் கூடியது 07 மாதங்களாகும்.

தவணை	படிமுறை	தவணைப் பணம்	காலம்
1	காணியை தயார் செய்தல், அகழ்வுப் பணிகள் மற்றும் அத்திவாரத்தை அமைத்தல், சுவர்களை எழுப்புதல், கட்டமைப்பு (கொங்கிறீட் பணிகள்) பணிகளை மேற்கொள்ளுதல்	2,000,000.00	03 மாதங்கள்
2	வீட்டுக் கூரையை அமைத்தல், கதவு மற்றும் யன்னல்களைப் பொருத்துதல், மின்சார வயர்களை பொருத்துதல் மற்றும் நீர்க் குழாய்களை பொருத்துதல்.	1,500,000.00	02 மாதங்கள்
3	வீட்டு தரையை அமைத்தல், சீமேந்து பூசுதல், வர்ணம் தீட்டுதல், மின்சார கருவிகள் மற்றும் குளியல் அறைக் கருவிகளை பொருத்துதலும் குடியேற உகந்த நிலைக்கு தயர் செய்தலும்	1,500,000.00	02 மாதங்கள்
மொத்தம்		**5,000,000.00**	**07 மாதங்கள்**

10.V. தவணைப் பணத்தை விடுவிக்கையில் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

10.V. அ. முதலாவது தவணையை விடுவித்தல்

வீட்டைக் கட்டுவதற்கு நிலத்தைத் தாயர் செய்து வீட்டின் அத்திவாரத்தை தயார் செய்து, சுவர்களை எழுப்பி, கட்டமைக்கு (கொங்கிறீட் பணிகள்) பணிகளை மேற்கொள்வதற்கு முதலாம் தவணையில் ரூ.2,000,000.00 பணத்தொகை விடுவிக்கப்படும்.

1. காணிக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் விதப்புரை
2. வீட்டுத் திட்டத்துக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகாரம் மற்றும் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் உடன்பாடு
3.காணி / மண்ணின் தன்மையை சரிபார்த்தல்
4. வீட்டுத் திட்டத்தை குறித்தல்.(house plan)

.இரண்டாவது தவணைப் பணத்தை விடுவிப்பதற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர் மாதிரி இலக்கம் 05இல் காணப்படும் மேற்பார்வை பத்திரத்தை பயன்படுத்துதல் வேண்டும்.

10.V.ஆ. இரண்டாவது தவணைப் பணத்தை விடுவித்தல்

வீட்டுக் கூரையை அமைத்து, வீட்டின் கதவு மற்றும் யன்னல்களை பொருத்துதல், மின்சார வயர்களை பொருத்துதல் மற்றும் நீர்க் குழாய்களை பொருத்துவதற்காக ரூ.1,500,000.00 பணத்தொகை இரண்டாவது தவணைக்காக விடுவிக்கப்படுகின்றது. இரண்டாவது தவணைப் பணத்தை விடுவிக்கையில் பின்வரும் விடயங்கள் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

1. காணியை தயார் செய்தல் மற்றும் அகழ்வு நடவடிக்கைகளின்போது தே.க.ஆ.நிறுவனத்தின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பது
2. அத்திவாரம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்

3. உருக்கு கம்பிகளின் விட்டத்தின் அளவு
4. நில மட்டத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்டுள்ள சுவருக்கு உள்ள உயரம்
5. பீடம் பீம்(Plinth beam)
6. முழு சுவரைச் சுற்றி போடப்படும் லிங்டன் (Lintel/Ring beam)
7. சீமேந்து கல்லின் அளவு மற்றும் தரம்
8. கட்டமைப்பில் குறைபாடுகள் காணப்படாமை
9. நிர்மாணப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் தரம்
10. முழு நிர்மாணப் பணிகளும் உரிய மட்டம் வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்

இரண்டாவது தவணைப் பணத்தை விடுவிக்கையில் தொழிநுட்ப உத்தியோகத்தர் மாதிரி இலக்கம் 05இல் காட்டப்பட்டுள்ள மேற்பார்வைப் பத்திரத்தை பயன்படுத்துதல் வேண்டும்.

10.V.இ. மூன்றாவது தவணைப் பணத்தை விடுவித்தல்

வீட்டின் தரையை தயார் செய்தல், சீமேந்து பூசுதல், சாந்து வேலைகளை மேற்கொள்ளுதல், மின்சார கருவிகள் மற்றும் குளியலறை கருவிகளைப் பொருத்தி வீட்டை குடியிருக்கும் நிலைக்கு தயார் செய்வதற்காக ரூ.1,500,000.00 பணத்தொகை மூன்றாம் தவணைக்காக விடுவிக்கப்படுகின்றது. இதன்போது அங்கீகாரம் வழங்குகையில் பின்வரும் விடங்கள் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

1. கதவு மற்றும் யன்னல்களின் அளவு மற்றும் தரம்
2. கூரைக்கு போடப்பட்டுள்ள மரத்தாலான கூரையின் தரம்
3. கூரைக்கு தகடு அல்லது ஓடு போடப்பட்டிருத்தல்
4. முழு வீட்டினதும் கட்டமைப்பு உரிய முறையில் கூரையின் கட்டமைப்புடன் பொருத்தப்பட்டிருத்தல்

அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கும் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு வீட்டுக் கட்டமைப்பானது உரிய முறையிலர் கூரையின் கட்டமைப்புடன் பொருத்தப்பட்டிருத்தல் அவசியமாகும். இதற்காக முழுக் கட்டமைப்பினதும் பூரண .இணைப்பினைப் பெற்றக்கொள்வதற்கு

I.வீட்டின் கட்டமைப்பு கூரையின் சட்டகத்துக்கும்
II.ரீப்ப, பறாளை போன்ற கூரையின் ஒவ்வொரு பாகமும் ஒன்றுக்கொன்றும்
III.கூரையின் கட்டமைப்பு பொருத்தப்பட்டுள்ள தகடுகளுடனும்
பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

5.ஏனைய தேவையான அனைத்து அம்கங்களையும் பூர்த்தி செய்திருத்தல்.

மூன்றாவது தவணைப் பணத்தை விடுவிப்பதற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர் மாதிரி இலக்கம் 06இல் காட்டப்பட்டுள்ள மேற்பார்வைப் பத்திரத்தை பயன்படுத்துதல் வேண்டும்.

முதலாவது/ இரண்டாவது/ மூன்றாவது தவணைப் பணத்தை விடுவிக்கையில், குறிப்பிட்ட தவணைப் பணத்தை விடுவித்ததன் பின்னர் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஆகக் குறைந்தது இரண்டு தடவையாகிலும் களப் பரிசோதனையை மேற்கொண்டு வீட்டைக் கட்டுவதற்காகப் பயன்படுத்தும் கட்டிடப் பொருட்களின் தரம் மற்றும் வழங்கப்பட்டுள்ள தொழிநுட்ப அறிவுறுத்தல்களை பின்பற்றும் விதம் குறித்தது மேற்பார்வை செய்து அறிக்கையினை பேணுதல் வேண்டும்.

10.VI. வீட்டின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து குடியிருப்பதை உறுதிப்படுத்துதல்

வீட்டின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், தே.க.ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழிநுட்ப விதப்புரைகளுக்கு அமைய அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கும் அம்சங்களை உள்ளடக்கியதாக உயர் தரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதை தொழிநுட்ப உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும், பழைய உயர் அபாயம் காணப்பட்ட வீட்டை உடைத்து அகற்றி, புதிய வீட்டில் குடியேறியுள்ளார்கள் எனவும் வாக்காளர் பட்டியலில் உள்ளீர்க்கப்பட்டுள்ளார்கள் எனவும் இணைப்பு 07 மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

11. மீள்குடியமர்த்தும் பணிகளுக்காக பயன்படுத்தும் அரசாங்கக் காணிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதி வழங்குதல்

தனி வீடு அல்லாத, அரசாங்க காணியொன்றில் மேற்கொள்ளப்படும் மீள்குடியமர்த்தும் திட்டங்களில் காணப்பட வேண்டிய பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக நிதியைக் கோர முடியும்.

- உள்ளக வீதிகளை அமைத்தல்
- நீர் வழிந்தோடுவதை முறைப்படுத்துவதற்கு கால்வாய் முறைமைகளை அமைப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள்
- மின்சார இணைப்பு வழங்குதல் (வீட்டுக்கான மின்சார இணைப்பு அல்ல)
- நீர் வழங்குதல் (வீட்டுக்கான நீர் வழங்கல் அல்ல)

இதன்போது குறிப்பிட்ட வீட்டுக் கருத்திட்டத்தின் கீழ் வீட்டை நிர்மாணிப்பதற்கு செலவாகும் அளவில் ஆகக் கூடிய 30% இற்கு உட்பட்டதாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக நிதியை ஒதுக்கீடு செய்ய முடியும்.

உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதியை கோருகையில், குறிப்பிட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தைக் குறிப்பிட்டு, குறிப்பிட்ட காணியின் நில அளவைத் திட்டத்தின் பிரதி மற்றும் மதிப்பீடுகளை முன்வைத்தல் வேண்டும்.

12.வீட்டு வாடகைக் கொடுப்பனவை வழங்குதல்

வெள்ளம், மண்சரிவு அல்லது ஏனைய அனர்த்தம் காரணமாக குடியிருக்க முடியாத வகையில் வீடு சேதமடைந்துள்ள சந்தர்ப்பத்திலும் மண்சரிவு உயர் அபாயம் காரணமாக காணப்படும் வீட்டில் ஒரு நாளாவது வசிப்பது உகந்ததல்லவென தே.க.ஆ.நிறுவனம் விதப்புரை வழங்கியுள்ளதொரு சந்தரப்பத்தில் இக்குடும்பங்களுக்கு பாதுகாப்பானதொரு இடத்தில் மீண்டும் குடியிருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரையில் மாதமொன்றுக்கு ஆகக் கூடியது ரூ.25,000.00 எனும் வரையறையில் 06 மாத காலத்துக்கு மாதாந்த வாடகையை செலுத்துதல் வேண்டும்.

இதன்போது, பின்வரும் அளவுகோல்களுக்கு அமைய வாடகை வீட்டுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கான கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையை மாவட்ட செயலாளரின் விதப்புரை சகிதம் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சின் செயலாளர் / அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மேலதிக செயலாளரின் அங்கீகாரத்தின் மீது வீட்டு வாடகைக் கொடுப்பனவை வழங்க முடியும்.

I.இயற்கை அனர்த்தம் காரணமாக வீடானது குடியிருக்க முடியாத அளவுக்கு சேதமடைந்திருத்தல் அல்லது உயர் அபாயம் காரணமாக தங்கியிருக்கும் வீட்டிலிருந்து நிரந்தரமாக வெளியேறுமாறு / தொடர்ந்தும் குடியிருப்பது உகந்ததல்லவென தே.க.ஆ.நிறுவனம் விதப்புரை செய்திருத்தல்

II.அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ள அல்லது உயர் அபாயம் காரணப்படும் வீட்டின் உரிமை பயனாளிக்கு சொந்தமாகாக் காணப்படுதல்

III.வீட்டு வாடகைக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ள நபர் அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ள அல்லது மண்சரிவு உயர் அபாயம் காணப்படும் வீட்டில் குடியிருப்பவராக இருத்தல் அல்லது மீள்குடியமர்த்துகையில் கருத்தில கொள்ளப்படும் தகைமைகளைக் கொண்ட நபராக இருத்தல்

IVவீட்டு வாடகைக் கொடுப்பனவானது, ஆகக் கூடிய 06 மாதங்களுக்கு மாத்திரம் வழங்கப்படுவதால், குறிப்பிட்ட காலப்பகுதியில் அனர்த்தத்துக்கு இலக்கானவர்களை பிறிதொரு இடத்தில குடியமர்த்துவதற்கான அடிப்படை விடயங்களை மேற்கொள்ள வேண்டுமென பயனாளியை அறிவுறுத்தி உடன்பாட்டை பெற்றுக்கொள்ளுதல்.

V.வீட்டு வாடகைக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் 06 மாத காலம் நிறைவடைகையில், நிர்மாணிக்கப்படும் வீட்டின் நிர்மாணப் பணிகள் இறுதித்த தருவாயில் காணப்பட வேண்டும் என்பதால், வாடகைக் கொடுப்பனவு வழங்கி முடிக்கப்படும் சந்தர்ப்பத்தில் புதிய வீட்டில் காணப்படும் வசதிகளை மேம்படுத்தியவாறு அங்கு குடியியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

13.மீள்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் காணியை அல்லது வீட்டை நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைவதற்கு முன்னர் விற்றல்

மீள்குடியமர்த்தும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பயனாளியொருவர் மீள்குடியேறும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யாது, கொள்வனவு செய்த காணியை அல்லது கொள்வனவு செய்யப்பட்டுள்ள காணியில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டை அல்லது முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டை அல்லது கொள்வனவு செய்த வீட்டில் மீள்குடியேறாது விற்பதற்கு கருதும் பட்சத்திலும் மற்றும் அதற்குப் பதிலாக பிறிதொரு காணி மற்றும் வீட்டை இத்திட்டத்தின் கீழ் கோரும் பட்சத்திலும், மேற்குறிப்பிடப்பட்ட முந்திய காணி மற்றும் வீட்டை பிறிதொரு பயனாளிக்கு வழங்குவதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேலும், பயனாளி காணியை அரசாங்கத்துக்கு கையளிக்காது, இத்திட்டத்தின் கீழ் நன்மை பெறக் கருதி காணியை விற்கும் சந்தர்ப்பத்தில், அரசாங்கம் அவருக்கு வழங்கிய பணத்தை அரசாங்க வணிக வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதொரு கடனாகக் கருதி குறிப்பிட்ட காலத்துக்கான வட்டித்தொகை மற்றும் முதன்மைப் பணத்தை மீளவும் அறவிடுதல் வேண்டும்.

.இதன்போது அரசாங்கம் பணத்தை வழங்கியுள்ள காலத்தில் நடைமுறையிலுள்ள வணிக வங்கியின் கடன் வட்டி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட வேண்டிய வட்டியை கணிப்பிடுதல் வேண்டும். மேலும் இப்பணத்தை ஒரே தடவையில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இதன்போது சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்படும் பயனாளிகளுக்கு ஒப்பந்தத்தின் பிரகாரம், சட்டரீதியான நடவடிக்கை மேற்கொண்டு அவர்களை மீள்குடியமர்த்தும் திட்டத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

14. நிதியை விடுவித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் முன்னேற்றத்தை அறிக்கையிடுதல்

மாவட்ட செயலாளர்களின் கோரிக்கைக்கு அமைய மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்காக நிதி விடுவிக்கப்படுவதுடன், இந்நிதியை மாவட்ட செயலாளர் தேவைக்கேற்ப பிரதேச செயலாளர்களுக்கு விடுவித்தல் வேண்டும்.

நிதியைக் கோருகையில் மீள்குடியமர்த்தப்படும் பயனாளிகள் பற்றிய தகவல்களை மாதிரி 03 மூலம் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு வழங்கப்படும் நிதிக்கான பௌதீக மற்றும் நிதித் தேர்ச்சியை ஒவ்வொரு மாதமும் 05ஆந் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் அறிக்கைகள் மற்றும் இதன் பிகாரம் தயார் செய்யப்படும் சுருக்க அறிக்கையினை குறிப்பிட்ட மாத்தின் 10ஆந் திகதிக்கு முன்னர் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிரதேச செயலாளரின் மேற்பார்வையின் கீழ், பிரதேச செயலகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் (அனர்த்த நிவாரண சேவைகள்) உள்ளிட்ட பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களினால் நிர்மாணப் பணிகள் மேற்பார்வை செய்யப்படுதலும் முன்னேற்றம் குறித்தது அறிக்கையிடப்படுதலும் வேண்டும்.

15. நிர்மாணப் பணிகளின் மேற்பார்வை மற்றும் முன்னேற்றம் குறித்து அறிக்கையிடுகையில், அபிவிருத்தி உத்தியோகத்தர் (அனர்த்த நிவாரண சேவைகள்) மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு பொறுப்பளிக்கப்படும் பணிகள்

I. NDRSC 03 மாதிரிப் படிவத்தில் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள தேசங்களை மதிப்பீடு செய்வதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு அமைய வீட்டு சேதங்களை பரிசீலனை செய்தல்

II. மீள்குடியமர்த்தப்படும் பயனாளிகள் தொடர்பில் 8.V மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் ஆவணக்குகோவைகளை முன்னெடுத்தல்

III. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தொழிநுட்ப வழிகாட்டல்களுக்கு அமைய அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய அம்சங்களை உள்ளடக்கியதாக வீட்டை நிர்மாணிப்பதற்கு பயனாளிகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

IV. தேவையான சந்தர்ப்பங்களில் நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு தேவையான தொழிநுட்ப அறிவை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் கோரி உரிய விண்ணப்பதாரிகளுக்கு வழங்குதல்.

V. வீட்டு நிர்மாணப் பணிகளை சிறப்பாக நிறைவு செய்வதற்கு பயனாளிகளை அறிவுறுத்தலும் ஊக்குவித்தலும்

VI. வீட்டு நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து பரிசீலித்து அடுத்த தவணைகளுக்கு நிதியை விடுவிப்பதற்கான விதப்புரைகளை வழங்குதலும் உரிய திகதியில் முன்னேற்ற அறிக்கைகளை வழங்குதலும்.

VII. பயனாளியொருவர் சகல தவணைப் பணத்தையும் பெற்றுக்கொண்டு வீட்டை நிர்மாணித்து குடியேறிய திகதி முதல் 02 வருட காலம் செல்லும் வரையில் ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை பின்னாய்வு அறிக்கையை தலைமை அலுவலகத்துக்கு அனுப்புதல்.

VIII. பிரதேச செயலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ள அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள் மீள்குடியமர்த்தல் பயனாளிகள் பற்றிய நிகழ்நிலை (ஒன்லைன்) தரவு முறைமையை இற்றைப்படுத்தி முன்னெடுத்தல் வேண்டுமென்பதுடன், மாவட்ட அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள் தரவு முறைமை இற்றைப்படுத்தப்படுவது குறித்து மாதாந்தம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

எயார் வையிஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வுபெற்ற)

டபிள்யுடபிள்யு, ஆர்டபிள்யு (மூன்று தடவை), ஆர்எஸ்பி (இரண்டு தடவை), யுஎஸ்பி,

எம்எம்எஸ்சி(உபாயவழிமுறைக் கற்கை – சீனா), எம்எஸ்சி(பாதுகாப்பு கற்றை) முகாமைத்துவம்,

எம்எஸ்சி(பாதுகாப்பு மற்றும் உபாய வழிமுறை கற்கை), எவ்என்டீயு (சீனா), பிஎஸ்சி

செயலாளர்

பாதுகாப்பு அமைச்சு

பிரதிகள்

1. ஜனாதிபதி செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. செயலாளர், நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
5. செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
6. செயலாளர், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
7. கணக்காய்வாளர் தலைமை அதிபதி

உரிய முறையில் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு

பதிவு இலக்கம் (மீள்குடியமர்த்தும் பதிவேட்டுக்கு ஏற்ப)

படிவம் 01

பாதுகாப்பு அமைச்சு

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

<u>'திட்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட மண்சரிவு அல்லது மண்சரிவு அபாயம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அடிப்படைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்</u>.

மாவட்டம்: ..... பிரதேச செயலகப் பிரிவு: .....

கிராம உத்தியோகத்தர் பிரிவு: ..... கிராமம்/பிரதேசம்/வீதி: .....

சேதத்தின் தன்மை: மண்சரிவு / வெள்ளம் / ஏனைய முழுமையான அனர்த்த சேதங்கள்/ மண்சரிவு உயர் அபாயம் / .....

(இப்பகுதி விண்ணப்பதாரரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்)

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர்: (காணி உரிமையாளர் அல்லது உரிமை கோருபவராக இருத்தல் வேண்டும்)

   .....

   .....

2. பெயர் முதலெழுத்துக்களுடன்:.....

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் | | | | | | | | | | | | |

4. தொலைபேசி இலக்கம் (நிலையான/கைபேசி): | | | | | | | | | | |

5. சேதமடைந்த / உயர் அபாயமுள்ள வீட்டின் முகவரி:

   .....

   .....

6. விண்ணப்பதாரர் தற்போது வசிக்கும் முகவரி:
.....
.....

7. விண்ணப்பதாரரின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை:

குடும்ப உறுப்பினர்	பெயர்	குடும்பத் தலைவருக்கான உறவுமுறை	வயது	தொழில்
குடும்பத் தலைவர்				
1 ஆம் உறுப்பினர்				
2 ஆம் உறுப்பினர்				
3 ஆம் உறுப்பினர்				
4 ஆம் உறுப்பினர்				
5 ஆம் உறுப்பினர்				

8. விண்ணப்பதாரரின் தொழில்: .....

துணைவியின்/கணவரின் தொழில்: .....

குடும்பத்தின் மாதாந்த வருமானம் (ரூபா): .....

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு இலக்கம் (விண்ணப்பதாரருடையது):
.....

9. சேதமடைந்த / உயர் அபாயமுள்ள வீடு அமைந்துள்ள காணி பற்றிய விபரங்கள்:

I. கிராம நிலதாரி பிரிவு: .....

II. கிராமத்தின் பெயர்: .....

III. சேதமடைந்த / உயர் அபாயமுள்ள வீடு அமைந்துள்ள காணியின் உரிமையின் தன்மை (√ அடையாளமிடவும்):

1	தனிப்பட்ட / சொந்தக் காணி		2	அரச காணி (பி/செயலருக்கு உரியது)		3	மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது	
4	(LRC) காணி		5	காணி உரிமை இல்லை		6	ஏனையவை	

IV. காணிக்கான மூல நிலஅளவை வரைபடம் அல்லது ஏனைய நிலஅளவை வரைபட இலக்கம் (இருப்பின்): .....

V. காணித் துண்டு இலக்கம் (Lot No): .....

VI. காணியின் எல்லைகள்:

வடக்கு: .....

தெற்கு: .....

கிழக்கு: .....

மேற்கு: .....

10. வசித்த காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் (குறிப்பிட்ட ஆவணத்தின் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்):

1	அறுதிஉறுதி		2	உரிமை மாற்ற உறுதி		3	நன்கொடைப் பத்திரம்	
4	உரிமப்பத்திரம்		5	குத்தகை உறுதி		6	எதுவுமில்லை	

11. சேதமடைந்த வீட்டின் மொத்தப் பரப்பளவு (சதுர அடி): .....

அவ்வீட்டிற்கு உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதி: உள்ளது [ ] இல்லை [ ]

12. கட்டிடத்தின் நிலை: 1. நிரந்தரம் [ ] 2. அரை நிரந்தரம் [ ] 3. தற்காலிகம் [ ]

13. கட்டிடத்தின் தன்மை: 1. தனி கட்டிடம் [ ] 2. மாடிக்கட்டிடம் [ ]
14. மாடிக்கட்டிடம் எனில் மாடிகளின் எண்ணிக்கை: 1. ஒரு மாடி [ ] 2. இரு மாடிகள் [ ] 3. மூன்று மாடிகள் [ ]
15. மீளக் குடியேறுவதற்கு தனக்கோ அல்லது தனது துணைவிக்கோ/கணவருக்கோ நாட்டின் எந்தவொரு மாவட்டத்திலாவது வேறு காணி அல்லது வீடு உள்ளதா? காணி உள்ளது [ ] வீடு உள்ளது[ ]
16. மீளக் குடியேறுவதற்காகத் தனக்கு வேறு காணி அல்லது வீடு இருக்கும்போது அதனை மறைத்து, மீளக் குடியேற்றும் திட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெறுவது குற்றவியல் செயலாகும் என்பதை நான் அறிவேன் என உறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. [ ]
17. மீளக் குடியேறுவதற்காகப் பயனாளியினால் தெரிவு செய்யப்பட்ட விருப்பங்கள்:

I. பயனாளியின் வேறு காணியில் வீடு அமைத்தல் (ரூபா 5.0 மில்லியன்) [ ]

II. பயனாளியின் வீட்டைப் புனரமைத்தல் (ரூபா 5.0 மில்லியன்) [ ]

III. அரசாங்கம் வழங்கும் காணியில் வீடு அமைத்தல் (ரூபா 5.0 மில்லியன்) [ ]

IV. அரசாங்க வீடமைப்புத் திட்டத்திலிருந்து வீடு பெறுதல் அல்லது பிரதேச செயலர் / மாவட்ட செயலாரது மேற்பார்வையில் அமைக்கப்படும் வீடமைப்புத் தொகுதியிலிருந்து வீடு பெறுதல் [ ]

V. வீடு ஒன்றை கொள்வனவு செய்தல் (ரூபா 5.0 மில்லியன்) [ ]

VI. காணியைக் கொள்வனவு செய்து வீடு அமைத்தல் (ரூபா 10.0 மில்லியன்) [ ]

மேலே நான் குறிப்பிட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..... விண்ணப்பதாரரின் கையொப்பம்: .....

கிராம உத்தியோகத்தரின் சான்றுரை

..... திகதியில் .....
கிராம உத்தியோகத்தர்பிரிவில் ..... (முகவரி) எனும் இடத்தில் அமைந்துள்ள சேதமடைந்த / உயர் அபாயமுள்ளதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள வீட்டில் வசிப்பவர் (பெயர்) ..... என்பவர் என்பதையும் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..... திகதி: ..... கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும்

உத்தியோகபூர்வ முத்திரையும்

அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தரின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்:

.....

.....

..... திகதி: ..... இடர் நிவாரண சேவை உத்தியோகத்தரின் கையொப்பமும்

உத்தியோகபூர்வ முத்திரையும்

பிரதேச செயலரின் அனுமதி:

.....

.....

..... திகதி: ..... பிரதேச செயலாளரின் கையொப்பமும்

உத்தியோகபூர்வ முத்திரையும்

பதிவு இலக்கம் (மீள்குடியமர்த்தும் பதிவேட்டுக்கு ஏற்ப) [redacted]

படிவம் 02

பாதுகாப்பு அமைச்சு

தேசிய இடர் நிவாரண சேவை மையம்

'திட்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களை மீளக் குடியேற்றும் திட்டம்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் (NBRO) பரிந்துரைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்குப் புறம்பான வீட்டுத் திட்டங்களுக்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்.

1.மாவட்டம்: .....பிரதேச செயலகப் பிரிவு: .....

2.கிராம உத்தியோகத்தர் பிரிவு: .....கிராமம்/பிரதேசம்/வீதி: .....

3.விண்ணப்பதாரரின்பெயர்:.....

4. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

5.தொலைபேசிஇலக்கம் (நிலையான/கைபேசி):

---

01. **முன்மொழியப்பட்ட திட்டத்தை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காணி பற்றிய விபரங்கள்**

1.1 மாவட்டம்: .....

1.2 பிரதேச செயலகப் பிரிவு: .....

1.3 காணி அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனம்: .....

1.4 கிராம உத்தியோகத்தர் பிரிவு: பெயர்: ..... இலக்கம்: .....

1.5 மீளக் குடியேற்றத்திற்காகப் பயன்படுத்தப்படும் காணி அரச காணி எனின்:

காணிக்கான மூல நிலஅளவைவரைபடம் அல்லது ஏனைய நிலஅளவை வரைபட இலக்கம்: .....

காணியின் பெயர்: .....

துண்டு இலக்கம் (Lot No): .....

1.5 மீளக் குடியேற்றத்திற்காகப் பயன்படுத்தப்படும் காணி தாமாகவே பெற்றுக்கொண்ட காணி எனின்:

I. நில அளவை வரைபட இலக்கம் மற்றும் திகதி: .....

1.6 காணியின் அளவு: ஏக்கர்: ..... பேர்ச்சர்ஸ்: .....

02. **முன்மொழியப்பட்ட வீட்டுத் திட்டம் பற்றிய விபரங்கள்**

2.1 முன்மொழியப்பட்ட வீட்டுத் திட்டம்:

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட திட்டமொன்றில் செய்யப்பட்ட மாற்றமாகும். [ ]

வேறு நிறுவனம்/தனி நபரால் தயாரிக்கப்பட்ட வீட்டுத் திட்டமாகும். [ ]

1.2 தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட திட்டமெனின் அதன் இலக்கம்: .....

2.3 முன்மொழியப்பட்ட வீட்டுத் திட்டம் வேறு நிறுவனம்/தனி நபரால் வடிவமைக்கப்பட்டதாயின்:

வீட்டின் பரப்பளவு (சதுர அடி)	பரப்பளவு (சதுர அடி)					
	வரவேற்பு அறை	அறை இலக்கம் 02	அறை இலக்கம் 03	அறை இலக்கம் 04	சமையலறை	மலசலகூடம்

2.4 முறையான விகிதாசாரத்திற்குத் தயாரிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட வீட்டுத் திட்டத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. [ ]

(தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட திட்டத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் / புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகள் வரைபடத்தில் சிவப்பு நிறச் சுவர்களால் காட்டப்பட வேண்டும்.)

<u>தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் (NBRO) பரிந்துரைக்கப்பட்ட அல்லது வேறு நிறுவனம்/தனி நபரால் வடிவமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு அந்நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்.</u>

அ. விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் மீள ஒப்படைத்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள்.

1. இந்த விண்ணப்பப் படிவத்தை உரிய பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ முத்திரையுடன் அங்கிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ள வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை மீண்டும் அதே அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். (தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் இந்த விண்ணப்பத்தை நேரடியாக வழங்குவதோ அல்லது ஏற்றுக்கொள்வதோ இல்லை).
2. இந்த விண்ணப்பப் படிவம் மீளக் குடியேற்றும் திட்டத்திற்காக,தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் (NBRO) பரிந்துரைக்கப்பட்ட அல்லது வேறு

நிறுவனம்/தனி நபரால் வடிவமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆ. **விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏனைய ஆவணங்கள்.**

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை இணைத்து உரிய பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து, அவ்விண்ணப்பத்திற்கான குறிப்பு இலக்கத்தைப் (Reference Number) பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. முன்மொழியப்பட்ட கட்டுமானத்திற்கான காணி தம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியாயின், அங்கீகாரம் பெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட நிலஅளவை வரைபடத்தின் பிரதி மற்றும் உறுதிப்பத்திரத்தின் பிரதி கட்டாயமாகும்.
3. முன்மொழியப்பட்ட திட்டம் வேறு நிறுவனம்/தனி நபரால் வடிவமைக்கப்பட்டதாயின், குறிப்பிட்ட அங்கீகாரத்தை வழங்கும் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பாளரால் வரையப்பட்டு, அவரால் பின்வருமாறு சான்றுரைக்கப்பட்டகட்டிட வரைபடத்தின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. "இந்தக் கட்டிட வரைபடம்/தொடர்புடைய கட்டுமானங்கள் என்னால் வடிவமைக்கப்பட்டு வரையப்பட்டது என்றும், இதனை நான் பரிசோதித்தேன் என்றும், இது அந்த இடத்தின் நில அமைப்பிற்கும் உறுதித்தன்மைக்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் சான்றுரைக்கின்றேன்." (பதவி, பதிவு இலக்கம், கையொப்பம், திகதி மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை).

விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டு

பரிசோதனைக்காக வழங்கப்பட்ட இலக்கம்: .....

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி: .....

ஏற்றுக்கொண்டவரின் பெயர்: .....

திகதி: .....

பதிவு இலக்கம் (மீள்குடியமர்த்தும் பதிவேட்டுக்கு ஏற்ப)

படிவம் 03

பாதுகாப்பு அமைச்சு

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

திட்வா' (DITWA) சூறாவளி காரணமாக ஏற்பட்ட மண்சரிவு/ வெள்ளம்/ ஏனைய முழுமையான அனர்த்த சேதங்கள் அல்லது மண்சரிவு உயர் அபாயம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியேற்றுவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

மாவட்டம்: ..... பிரதேச செயலகப் பிரிவு: .....

கிராம நிலதாரி பிரிவு: ..... கிராமம்/பிரதேசம்/வீதி: .....

சேதத்தின் தன்மை: மண்ச்சரிவு/ வெள்ளம்/ ஏனைய முழுமையான அனர்த்த சேதங்கள்/ மண்சரிவு உயர் அபாயம் .....

---

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர்: (காணி உரிமையாளர் அல்லது உரிமை கோருபவராக இருத்தல் வேண்டும்)

   .....

   .....

2. பெயர்முதலெழுத்துக்களுடன்:.....

3. தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

4. தொலைபேசி இலக்கம் (நிலையான/கைபேசி): | | | | | | | | | | |

5. சேதமடைந்த / அதிக அபாயமுள்ள வீட்டின் முக
.....
.....

6. விண்ணப்பதாரர் தற்போது வசிக்கும் முக
.....
.....

7. வீட்டில் வசிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை: .....

8. குடும்பத்தின் மாதாந்த வருமானம் (ரூபா): .....

9. சேதமடைந்த / அதிக அபாயமுள்ள வீடு அமைந்துள்ள காணி பற்றிய விபரங்கள்:

    I. பாதிக்கப்பட்ட/சேதமடைந்த வீடு அமைந்துள்ள காணியின் உரிமையின் தன்
    .....

    II. NBRO (தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்) / நீர்ப்பாசன திணை
    அறிக்கையின் இலக்கம் மற்றும் த
    .....

    III. வீடு அமைந்துள்ள இடம் (Loca
    .....

10. மீளக் குடியேறப்போகும் இடம் பற்றிய விபரங்கள்:

    I. வீடு அமையவுள்ள இடம் (Loca
    .....

    II. காணி/வீட்டிற்கு NBRO பரிந்துரை வழங்கிய அறிக்கையின் இலக்கம் மற்றும் த
    .....

11. மீளக் குடியேறுவதற்காகப் பயனாளியினால் தெரிவு செய்யப்பட்ட விருப்பங்கள்:

    I. பயனாளியின் வேறு காணியில் வீடு அமைத்தல் (ரூபா 5.0 மில்லியன்) [ ]

    II. அரசாங்கம் வழங்கும் காணியில் வீடு அமைத்தல் (ரூபா 5.0 மில்லியன்) [ ]

    III. அரசாங்க வீடமைப்புத் திட்டத்திலிருந்து வீடு பெறுதல் அல்லது பிரதேச செய
    மாவட்ட செயலர் மேற்பார்வையில் அமைக்கப்படும் வீடமைப்புத் தொகுதியிலி
    வீடு பெறுதல் [ ]

    IV. வீடு ஒன்றை கொள்வனவு செய்தல் (ரூபா 5.0 மில்லியன்) [ ]

    V. காணி கொள்வனவு செய்து வீடு அமைத்தல் (ரூபா 10.0 மில்லியன்) [ ]

பதிவு இலக்கம் (மீள்குடியமர்த்தும் பதிவேட்டுக்கு ஏற்ப)

படிவம் 04

பாதுகாப்பு அமைச்சு

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

'திட்வா' (DITWAH) சூறாவளி காரணமாக ஏற்பட்ட மண்சரிவு / வெள்ளம்/ ஏனைய முழுமையான அனர்த்த சேதங்கள் அல்லது மண்சரிவு உயர் அபாயம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியேற்றும் திட்டம்.

அரச நிதி ஒதுக்கீட்டின் முதலாம் தவணையை விடுவிப்பதற்கான மேற்பார்வைப் பத்திரம்

(பிரதேச செயலகத்தின் பயன்பாட்டிற்கு மாத்திரம்)

---

1. விண்ணப்பதாரரின்பெயர்:.....
2. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

3. தொலைபேசிஇலக்கம் (நிலையான/கைபேசி):

4. திகதி: .....

1.0 புதிய வீடு அமைக்கவுள்ள காணி பற்றிய விபரங்கள்

1.1 மாவட்டம்: .....

1.2 பிரதேச செயலகப் பிரிவு: .....

1.3 கிராம உத்தியோகத்தர் பிரிவு: .....

1.4 கிராமம்/பிரதேசம்/வீதி: .....

1.5காணி உரிமையாளரின் பெயர்:

.....

1.6 அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணி எனில்:

- I. காணியின் பெயர்: .....
- II. துண்டு இலக்கம் (Lot No): .....

1.7 தன்னிடமுள்ள / தன்னால் கொள்வனவு செய்யப்பட்ட காணி எனின்:

II. நில அளவை வரைபட இலக்கம் மற்றும் திகதி: .....

2.0 வீடு பற்றிய அடிப்படை விபரங்கள்

2.1 தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் (NBRO) வழங்கப்பட்ட வீட்டுத் திட்டமெனின் அதன் இலக்கம்: .....

2.2 முன்மொழியப்பட்ட வீட்டுத் திட்டம் வேறு நிறுவனம்/தனி நபரால் வடிவமைக்கப்பட்டதாயின், பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க:

அடிப்படை அம்சங்கள்	இருப்பின் √ அடையாளமிடவும்	பரப்பளவு (சதுர அடி)
வரவேற்பு அறை		
படுக்கையறை 01		
படுக்கையறை 02		
சமையலறை		
மலசலகூடம்		

3.0 தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் (NBRO) அங்கீகாரம் மற்றும் உரிய உள்ளூராட்சி மன்றத்தின் இணக்கம் பெறப்பட்ட வீட்டு வரைபடம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆரம்பத் தவணையை விடுவிப்பது பொருத்தமானதா/ பொருத்தமற்றதா	
பொருத்தமற்றதெனின் அதற்கான காரணங்கள்	

குழு உறுப்பினர்	**பெயர்**	**கையொப்பம்**	**திகதி**
உதவி பிரதேச செயலாளர்			
தொழில்நுட்ப உத்தியோகத்தர்			
அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்			

பதிவு இலக்கம் (மீள்குடியமர்த்தும் பதிவேட்டுக்கு ஏற்ப)

படிவம் 05

பாதுகாப்பு அமைச்சு

தேசிய இடர் நிவாரண சேவை மையம்

'திட்வா' (DITWA) சூறாவளி காரணமாக ஏற்பட்ட மண்சரிவு / வெள்ளம்/ ஏனைய இடர் முழுமையான சேதங்கள் அல்லது மண்சரிவு உயர் அபாயம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியேற்றும் திட்டம்.

அரச நிதி ஒதுக்கீட்டின் இரண்டாம் தவணையை விடுவிப்பதற்கான மேற்பார்வைப் பத்திரம்

(பிரதேச செயலகத்தின் பயன்பாட்டிற்கு மாத்திரம்)

---

1. விண்ணப்பதாரரின்பெயர்:.....
2. தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |
3. தொலைபேசி இலக்கம் (நிலையான/கைபேசி): | | | | | | | | | | |
4. திகதி: .....

---

1. வீட்டின் பின்வரும் அடிப்படை அம்சங்களுக்கான அத்திவாரம் இடுதல் மற்றும் சுவர்கள் அமைக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா? (இருப்பின் √ அடையாளமிடவும்)

விபரம்	√ அடையாளமிடவும்
வரவேற்பு அறை	
படுக்கையறை 01	
படுக்கையறை 02	

விபரம்	√ அடையாளமிடவும்
சமையலறை	
மலசலகூடம்	

2. கட்டுமானத்தின் முன்னேற்றம்

இல.	விபரம்	பௌதீக நிலை	
		திருப்திகரமானது	திருப்தியற்றது
1	காணி தயாரிப்பு மற்றும் அகழ்வாராய்ச்சி பணிகளின் போது NBRO வழிகாட்டல்களைப் பின்பற்றுதல்		
2	காணி மற்றும் மூலப்பொருட்களின் தரம்		
3	அத்திவாரம் அமைத்தல்		
4	உருக்கு கம்பிகளின் விட்டம்		
5	சிமெந்து கற்களின் அளவு மற்றும் தரம்		
6	பீடம் விட்டம் (Plinth beam)		
7	அனைத்து சுவர்களையும் சுற்றி அமையும் விட்டம் (Lintel/Ring beam)		

இல.	விபரம்	பெதீக நிலை	
		திருப்திகரமானது	திருப்தியற்றது
8	தரை மட்டத்திலிருந்து முடிக்கப்பட்ட தரைக்கான தூரம்		
9	கட்டமைப்பில் குறைபாடுகள் எதுவும் இல்லை		
10	நிர்ணயிக்கப்பட்ட மட்டம் வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது		

இரண்டாம் தவணையை விடுவிப்பது பொருத்தமானதா/ பொருத்தமற்றதா	
பொருத்தமற்றதெனில் அதற்கான காரணங்கள்	

குழு உறுப்பினர்	பெயர்	கையொப்பம்	திகதி
உதவி பிரதேச செயலாளர்			
தொழில்நுட்ப உத்தியோகத்தர்			
அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்			

பதிவு இலக்கம் (மீள்குடியமர்த்தும் பதிவேட்டுக்கு ஏற்ப)

படிவம் 06

பாதுகாப்பு அமைச்சு

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

'திட்வா' (DITWA) சூறாவளி காரணமாக ஏற்பட்ட மண்சரிவு/ வெள்ளம்/ ஏனைய முழுமையான சேதங்கள் அல்லது மண்சரிவு உயர் அபாயம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியேற்றும் திட்டம்.

அரச நிதி ஒதுக்கீட்டின் மூன்றாம் தவணையை விடுவிப்பதற்கான மேற்பார்வைப் பத்திரம்

(பிரதேச செயலகத்தின் பயன்பாட்டிற்கு மாத்திரம்)

1. விண்ணப்பதாரரின்பெயர்:.....
2. தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |
3. தொலைபேசி இலக்கம் (நிலையான/கைபேசி): | | | | | | | | | | |
4. திகதி: .....

---

1. வீட்டின் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கும் வகையில் கூரை அமைக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா? (இருப்பின் √ அடையாளமிடவும்)

விபரம்	√ அடையாளமிடவும்
வரவேற்பு அறை	
படுக்கையறை 01	
படுக்கையறை 02	

விபரம்	√ அடையாளமிடவும்
சமையலறை	
மலசலகூடம்	

2. வீட்டு வரைபடத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையிலான கதவுகள் மற்றும் ஜன்னல்கள் இடப்பட்டுள்ளனவா?

ஆம் [ ] இல்லை [ ]

3. **கட்டுமானத்தின் முன்னேற்றம் (இரண்டாம் படிமுறை)**

இல.	விபரம்	பௌதீக நிலை	
		திருப்திகரமானது	திருப்தியற்றது
1	கதவு மற்றும் ஜன்னல்களின் அளவு மற்றும் தரம்		
2	கூரைக்கு பயன்படுத்தப்பட்ட மரங்களின் தரம்		
3	கூரைக்குரிய தகடுகள் அல்லது ஓடுகளின் பயன்பாடு		
4	முழு வீட்டின் கட்டமைப்பும் கூரை கட்டமைப்படன் சரியாக இணைக்கப்பட்டுள்ளமை		
5	மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தேவையான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை		

இல.	விபரம்	பெதீக நிலை	
		திருப்திகரமானது	திருப்தியற்றது
6	நீரைப் பெற்றுக்கொள்வதற்கான தேவையான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை		
7	முழுமையான கட்டுமானப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட மட்டம் வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது		

மூன்றாம் தவணையை விடுவிப்பது பொருத்தமானதா/ பொருத்தமற்றதா	
பொருத்தமற்றதெனின் அதற்கான காரணங்கள்	

குழு உறுப்பினர்	பெயர்	கையொப்பம்
உதவி பிரதேச செயலாளர்		
தொழில்நுட்ப உத்தியோகத்தர்		
இடர் நிவாரண சேவை உத்தியோகத்தர்		

பதிவு இலக்கம் (மீள்குடியமர்த்தும் பதிவேட்டுக்கு ஏற்ப)

படிவம் -07

பாதுகாப்பு அமைச்சு

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

மீள் குடியேற்றும் திட்டம்

மூன்றாம் தவணைக்குரிய கட்டுமானப் பணிகள் குறித்த மேற்பார்வைப் பத்திரம் மற்றும் புதிய வீட்டில் குடியேறியதை உறுதிப்படுத்தல்

(பிரதேச செயலகத்தின் பயன்பாட்டிற்கு மாத்திரம்)

1. விண்ணப்பதாரரின்பெயர்:.....
2. தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |
3. தொலைபேசி இலக்கம் (நிலையான/கைபேசி): | | | | | | | | | | |
4. திகதி: .....

1. மூன்றாம் தவணைக்குத் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம்

இல.	விபரம்	பௌதீக நிலை	
		திருப்திகரமானது	திருப்தியற்றது
1	வீட்டின் கட்டப்பட்டுள்ள உரிய பகுதிகளில் தரை வேலைப்பாடுகள்		
2	முடிவுறுத்தப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் தரம்		
3	மின்சார உபகரணங்களைப் பொறுத்துதல்		

இல.	விபரம்	பெதீக நிலை	
		திருப்திகரமானது	திருப்தியற்றது
4	குளியலறை/மலசலகூட உபகரணங்களைப் பொறுத்துதல்		
5	நீர் வசதி இருத்தல்		
6	மின்சார வசதி இருத்தல்		
7	ஒட்டுமொத்த கட்டுமானப் பணிகளின் தரம்		

வீட்டின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த பின்னர், அக் கட்டுமானப் பணிகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் (NBRO) தொழில்நுட்பப் பரிந்துரைகளுக்கு அமைய, அனர்த்தங்களை தாங்கும் தன்மைகளை உள்ளடக்கி உயர்தரத்தில் முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் விண்ணப்பதாரர் ..... ஆம் திகதி புதிய வீட்டில் குடியேறியுள்ளார்.

உயர் அபாயகரமான இடத்தில் இருந்த பழைய வீடு இடித்து அகற்றப்பட்டுள்ளது: ஆம் / இல்லை

வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது: ஆம் / இல்லை

உதவி பிரதேச செயலாளர்		
தொழநுட்ப உத்தியோகத்தர்		
அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்		

இணைப்பு -01

மண்சரிவு/ உயர் மணசரிவு அபாயம் காரணமாக மீளக் குடியேற்றப்படும் குடும்பங்களுக்கான மீளக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் வீடு ஒன்றினை நிர்மாணிப்பதற்கு/கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்கும் ஒப்பந்தம்.

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் ..... மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் சார்பாக, 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரப் பரவலாக்கல் (பிரதேச செயலாளர்கள்) சட்டத்தின் பிரகாரம், குறித்த மாவட்டத்தின் ..... பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளராகப் பணியாற்றும் ..... வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் .....ஐக் கொண்டுள்ள ..... ஆகிய (பெயர்) மற்றும் அவரது பிரதிநிதிகள் மற்றும் வழித்தோன்றல்கள், இனிமேல் இங்கு "**முதலாம் தரப்பினர்**" என அழைக்கப்படுவர்.

மற்றும் ..... (முகவரி) இல் வசிக்கும் ..... தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்ட ..... ஆகிய (பெயர்), இனிமேல் இங்கு "**இரண்டாம் தரப்பினர்**" என அழைக்கப்படுவர்.

இந்த இரு தரப்பினருக்குமிடையே ..... ஆண்டு ..... மாதம் ..... ஆம் திகதி ..... இல் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் **08/2025 மற்றும் 08/2025 (1) ஆம் இலக்க வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கைகளின்** கீழ், 'திட்வா' சூறாவளியின் அனர்த்த பாதிப்பினால் முழுமையாகச் சேதமடைந்து வசிக்க முடியாத நிலைக்குள்ளான வீடு ஒன்றினை மீண்டும் முழுமையாக நிர்மாணிப்பதற்கு **5,000,000.00** ரூபா நிதியினை வழங்கத் திறைசேரிச் செயலாளர் தீர்மானித்துள்ளார். இந்நிதியினை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகள் 103-02-18-007-2202 எனும் செலவுத் தலைப்பின் கீழ் மாவட்டச் செயலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய 08/2025 மற்றும் **08/2025 (1) சுற்றறிக்கைகளின்படி** மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் இறுதிப் பிரதிநிதியாக, குறித்த மாவட்டத்தின் பிரதேச செயலாளராகச் செயற்படும் மேற்கூறிய பெயரைக் கொண்டவர் இந்த ஒப்பந்தத்தில் "முதலாம் தரப்பினர்" ஆகவும், மேற்கூறிய முகவரியில் வசிக்கும் இரண்டாம் தரப்பினர் இந்த ஒப்பந்தத்தில் "இரண்டாம் தரப்பினர்" ஆகவும் இணைந்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 'திட்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளம்/நிலச்சரிவு/ஏனைய இடர்களினால் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் நிலச்சரிவு அதிக அபாயம் உள்ளதாக இனங்காணப்பட்டுள்ள குடும்பங்களை மீளக் குடியேற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வழிகாட்டியில் (**இணைப்பு 01**) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஒப்பந்த நிபந்தனைகள்:

1. இரண்டாம் தரப்பினர் தற்போது வசிக்கும் ..... இலக்கம் கொண்ட, ... கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ..... முகவரியில் அமைந்துள்ள நிலம் மற்றும் சொத்து (முதலாம் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது), **இலங்கையின் நியதிச்சட்ட விசேட நிறுவனமான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால்** (NBRO) பரிசோதிக்கப்பட்டு, ... திகதியிடப்பட்ட ..... இலக்க அறிக்கையின்படி, நிலச்சரிவு அல்லது நிலச்சரிவு அதிக அபாயம் காரணமாக மனிதக் குடியிருப்புக்கு உகந்ததல்லாத அபாயகரமான இடமென அறிவிக்கப்பட்டுள்ளதை இரண்டாம் தரப்பினர் முழுமையாக

ஏற்றுக்கொள்கின்றனர்

2. மேற்கூறிய .....ஆம் இலக்க மற்றும்.....ஆந் திகதிய அறிக்கையின்படி, குறித்த வீட்டில் தொடர்ந்து வசிப்பது இரண்டாம் தரப்பினர் மற்றும் அவரது குடும்பத்தினரின் ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலானது என்பதையும், அவ்வாறான ஆபத்தினால் மரணம் அல்லது பாரதூரமான காயங்கள் ஏற்படலாம் என்பதையும் இரண்டாம் தரப்பினர் தெளிவாகப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்கின்றனர்.

3. அதன்படி, அபாயகரமான இடத்திலிருந்து வெளியேறி மீளக் குடியேறுவதற்காக, இரண்டாம் தரப்பினருக்குச் சொந்தமான காணியில் வீடு கட்டுவதற்கு/அரசாங்கத்தினால் வழங்கப்படும் காணியில் வீடு கட்டுவதற்கு/வீட்டுடன் கூடிய காணியை வாங்குவதற்கு/காணியை வாங்கி வீடு கட்டுவதற்கு முதலாம் தரப்பினரால் ரூபா ..... (.....) நிதியுதவி வழங்கப்படும். இரண்டாம் தரப்பினர் இந்நிதியினை நன்றியுடன் ஏற்றுக்கொள்வதுடன், பழைய அபாயகரமான இடத்திலிருந்து வெளியேறி புதிய இடத்தில் குடியேறச் சம்மதிக்கின்றனர்.

4. இந்த நிதியுதவி ஒரே தவணையாகவோ (வீடு வாங்குவதற்கு) அல்லது பல தவணைகளாகவோ வழங்கப்படும். இறுதித் தவணைப் பணம் வழங்கப்பட்ட 60 நாட்களுக்குள் அல்லது முதலாம் தரப்பினரால் அறிவிக்கப்படும் திகதியில் புதிய வீட்டில் குடியேற இரண்டாம் தரப்பினர் சம்மதிக்கின்றனர். அத்துடன் புதிய வீட்டில் குடியேறிய 45 நாட்களுக்குள் பழைய அபாயகரமான இடத்தில் உள்ள கட்டிடத்தை இடித்து அகற்றவும், மின்சாரம் மற்றும் நீர் இணைப்புகளைத் துண்டிக்கவும் (விவசாயத் தேவைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில்) இரண்டாம் தரப்பினர் சம்மதிக்கின்றனர்.

5. வழங்கப்படவுள்ள அனைத்து நிதியுதவிகளும் இரண்டாம் தரப்பினரின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே வழங்கப்படுகின்றன. இந்நிதியை மீளக் குடியேற்றத் தேவைக்காக அன்றி வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்துவது அரசாங்கப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் என்பதையும் அது சட்டவிரோதமானது என்பதையும் இரண்டாம் தரப்பினர் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

6. இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறினால், அது ஒப்பந்தத்தை மீறிய செயலாகக் கருதப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில், இரண்டாம் தரப்பினர் பெற்றுக் கொண்ட அனைத்துப் பணத்தையும் அரசாங்க வங்கிகளின் சாதாரண கடன் வட்டி விகிதத்துடன் சேர்த்து முதலாம் தரப்பினருக்கு மீளச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்.

அதன்படி, குறித்த இறுதிச் கொடுப்பனவின் பின்னர், இந்த ஒப்பந்தத்தின் 4 வது பிரிவின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ள புதிய வீட்டிற்கு குடிபெயரும் திகதி கடந்ததன் பின்னர், முதலாவது அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீட்டில் இரண்டாம் தரப்பினர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் தங்கியிருப்பது அந்தத் தருணத்திலிருந்து இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறும் செயலாகும் என்பதையும், அது குறித்து இரு தரப்பினரும் அறிந்துள்ளனர் என்பதையும் இதன் மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.மேலும், இரண்டாம் தரப்பினர் எவரேனும் ஒருவரின் உயிருக்கு, ஆரோக்கியத்திற்கு அல்லது ஏதேனும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் அல்லது ஒருவருக்கு மரணம் அல்லது கடுமையான காயம் ஏற்படுத்தும் வஞ்சகமான எண்ணத்துடன் (துர்நோக்கத்துடன்) வேண்டுமென்றே செயற்படுகின்றார் என்பதை இரு தரப்பினரும் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு இணங்குகின்றனர்.

07. மேலும், இந்த ஒப்பந்தத்தின் கீழான மீள்குடியேற்றத் திட்டத்தின் கீழ் வீடு கட்டப்பட்ட /கொள்வனவு செய்யப்பட்ட பின்னர், அங்கு குடியேறியிருந்தாலும் இல்லாவிட்டாலும், பழைய வசிப்பிடத்தில் தான்

/ தனது குடும்ப உறுப்பினர் / தனது ஊழியர் அல்லது பிரதிநிதி / வேறு எவரேனும் தங்கியிருக்கச் செய்தல் அல்லது அனுமதித்தல் என்பது, அவ்வாறு தங்கியிருக்கும் நபருக்கு / அவரது ஆரோக்கியத்திற்கு அல்லது அவரது நலனுக்கு அல்லது அவரது உயிருக்கு எதிராக இரண்டாம் தரப்பினரால் வேண்டுமென்றே இழைக்கப்படும் குற்றமாகும் என்பதையும், அதற்கமைய அத்தகைய அபாயகரமான இடத்தில் வேறொரு தரப்பினர் தங்குவதற்கு அனுமதிப்பது, அக்காணியை வசிப்பிடத் தேவைகளுக்காக விற்பனை செய்வது/ குத்தகைக்கு விடுவது அல்லது வேறு வழிகளில் வழங்குவது சட்டவிரோதமாக அரசாங்கப் பணத்தை துஷ்பிரயோகம் செய்யும் செயலாகும் என்பதையும், அது ஒருவரின் உயிர் மற்றும் ஆரோக்கியத்திற்கு எதிராக வேண்டுமென்றே செய்யப்படும் பாதகமான செயலாகும் என்பதையும் இரண்டாம் தரப்பினர் முழுமையான புரிதலுடன் ஏற்றுக்கொள்வதாக இதன் மூலம் வெளிப்படையாகப் பிரகடனப்படுத்துகின்றேன்.

08. இந்த ஒப்பந்தத்தின்படி முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அபாயகரமான சொத்தில் தங்கியிருந்து, அச் சொத்துக்கோ அல்லது ஏதேனும் நபருக்கோ ஏதேனும் சேதம் ஏற்பட்டால், அந்த நேரத்தில் நடைமுறையிலுள்ள அனர்த்த நிவாரண சேவைச் சுற்றறிக்கைகள் அல்லது அரசாங்கத்தினால் தொகுக்கப்பட்ட வேறு எந்தச் சுற்றறிக்கைகளின் பிரகாரமும் எவ்வித உரிமைக்கோ, சந்தர்ப்பத்திற்கோ, இழப்பீட்டிற்கோ அல்லது வசதிகளுக்கோ தார்மீக உரிமை இல்லை என இரு தரப்பினரும் வெளிப்படையாக உடன்படுகின்றனர்.

09. இப் பலன்களைப் பெற்றுக்கொண்டமையால், இரண்டாம் தரப்பினர் அல்லது இரண்டாம் தரப்பினரின் துணையை (மனைவி/கணவன்) அனர்த்த நிவாரண சேவை மையத்தினால் வழங்கப்படும் இத்தகைய எவ்வித திட்டங்களிலும் உள்வாங்கப்படமாட்டார்கள் என்பதோடு, இரண்டாம் தரப்பினரின் பிள்ளைகளுக்கு 18 வயது பூர்த்தியாகும் வரை அனர்த்த நிவாரண சேவை மையத்தினால் வழங்கப்படும் இத்தகைய எவ்வித வீடுகளுக்கும் உரிமை கிடையாது.

இந்த ஒப்பந்தத்தின் விடயப்பொருள் தொடர்பாக ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு இரு தரப்பினருக்கும் சட்டபூர்வ அதிகாரம் உண்டு என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்வதுடன், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சரியான புரிதலுடன் இரு தரப்பினரும் உடன்படுகின்றன

அதற்கமைய, இந்த ஒப்பந்தத்தின் தரப்பினர்களான ..... ஆகியோரும் ..... பிரதேச செயலாளர் பதவியினை வகிக்கும் ..... ஆகியோரும் 20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆம் திகதி ..... இல் வைத்து, இந்த ஒப்பந்தத்தில் தமது சுயாதீனமான மற்றும் தன்னார்வ விருப்பத்தின் பேரில் சரியான புரிதலுடன் கையொப்பமிட்டனர் என்பதையும், முதலாம் தரப்பினர் தனது உத்தியோகபூர்வ முத்திரையினைப் பதித்துள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்

.....முதலாம் தரப்பினர் .....இரண்டாம் தரப்பினர்

சாட்சிகள்:

1. பெயர்: .....
   முகவரி: .....
   கையொப்பம்: .....

